# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்)

**அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யாவைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

*வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ கே. காதர் மஸ்தான்
அவர்களால் 2016, ஏப்பிறல் மாதம் 07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2016, பெப்புருவரி மாதம் 29 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ ***101 ஆம் சட்டமூலம்*** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : 10.00**

## அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யாவைக் கூட்டிணைப்பதற்கான தொரு சட்டம்

**முன்னுரை.**

“அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா” என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான நிறுவனம் சங்கைக்குரிய அஸ்செய்யிது அப்துர் ரஷீத் கோயா தங்கல் கத்த ஸல்லாஹு ஷிர்ராகுல் அஸீஸ் அவர்கள் அர்ப்பணித்த புனித சேவை அனுபவத்துடனும் அவரால் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட நிறுவனத்தோடு தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டு நடாத்தும் நோக்கத்துக்கெனச் சொல்லப்பட்ட நிறுவனமானது, எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்கும் கருமங்களுக்குமாகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றி கொண்டு நடாத்தியுள்ளதுடன், கூட்டிணைப்பதற்கு விண்ணப்பித்துள்ளதாதலாலும் அத்தகைய விண்ணப்பத்தை அனுமதித்தல் பொது மக்களுக்கு நன்மைபயக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**சுருக்கப் பெயர்.**

**1**. இச்சட்டம் 2016 ஆம் ஆண்டின்  ஆம் இலக்க, அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

**அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யாவைக் கூட்டிணைத்தல்.**

**2**. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் “நிறுவனம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யாவின் ஸ்தாபகர் சங்கைக்குரிய அஸ்செய்யிது செய்கு கோயா தங்கல் அல் காதிரிய்யா வர்ரிபாய்யாவும் அவரின் சந்ததி வழியில் வருபவர்களும் (இதனகத்துப் பின்னர் “கூட்டுத்தாபனம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா என்னும் பெயரின்கீழும் மகுடத்தின் கீழும் இடையறாவழியுரிமை கொண்டவொரு நிறுவனமாக இருத்தல் வேண்டும். அத்துடன் அப்பெயர் கொண்டு அது எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம் பொது இலச்சினை

2-PL 009889 -225 (2016/04)

யொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் அது விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.*

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாயிருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) திருக்குர்ஆன், ஹதீது, பிகுஹு மற்றும் ஹிப்ளு பற்றிய போதனைகளை மேற்கொள்ளல் ;

(ஆ) அரபு இலக்கணம் மற்றும் சாபி, ஹனபி, ஹன்பலி மற்றும் மாலிகி மதுஹப்கள் ஆகியவற்றின் சட்டவிதிகள் குறித்த போதனைகள் மேற்கொள்ளல் ;

(இ) திருக்குர்ஆனை மனனஞ் செய்வித்தல் அத்துடன் மேற்காண் போதனைகளை விளக்குவதுடன் அவை குறித்த ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல் ;

(ஈ) எம்பெருமானார் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் ஞாபகார்த்த நிகழ்வுகளை மேற்கொள்ளலும் மற்றும் ஏனைய சங்கைக்குரிய ஆத்மீகத் தலைவர்களின் அவசியமான நிகழ்வுகளை நினைவு கூரலும் ;

(உ) காதிரிய்யாத் தரீக்காவின் ஸ்தாபகரான சங்கைக்குரிய குத்புல் அக்தாப் அஷ்ஷெய்க் அஸ்ஸெய்யித் முஹியத்தீன் அப்துல் காதிர் ஜீலானி (கத்தஸ்ஸல்லாஹு ஸிர்ராஹுல் அஸீஸ்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றையும் ஆய்வையும் மேற்கொள்ளல் ;

(ஊ) மௌலவி கற்கையை நடாத்தி, மௌலவி பட்டம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ;

(எ) வாரந்தோறும் காதிரிய்யா ராதிபுவை நடாத்துவதும் வருடமொரு முறை முஹியத்தீன் கந்தூரியையும் சிறப்பாக நடாத்துதல் ;

(ஏ) உருது அத்துடன் ஏனைய மொழிக் கற்கைகளை மேற்கொண்டு நடாத்துவதுடன் அவற்றை மேம்படுத்தல் ;

(ஐ) மதரசா பிள்ளைகளின் வாசிப்புப் பழக்கத்தை மேம் படுத்துவதற்காக இஸ்லாமிய, விஞ்ஞான நூல்கள் அடங்கிய நூல்நிலையத்தை அபிவிருத்தி செய்வதுடன் பேணிப்பாதுகாத்தல் ;

(ஒ) அஹ்லுஸ் சுன்னத்து வல்ஜமாஅத்துக் கோட்பாடுகளைப் போதிப்பதும் மேம்படுத்துவதும் ;

(ஓ) இஸ்லாமிய கலா ஞானத்தையும், தரீக்காக்களையும் மேம்படுத்துவதற்கு ஏதுவாக கல்வி ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கான நூல்களைக் கொண்ட நூல் நிலையத்தைச் செவ்வனே கொண்டு நடாத்துதல் ;

(ஔ) சங்கைக்குரிய அஸ்செய்யிது செய்கு அப்துர் ரஷீத் கோயாத்த தங்கல் அல் காதிரிய்யாவர் ரிபா இய்யா அவர்களின் தற்றுணிபின்பேரில் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமாகக் கூடிய வாறான உகந்தனவான அல்லது அதன் இடைநேர் விளைவான அத்தகைய எல்லாச் செயல்களையும் செய்தல்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.*

**4**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்கும் முன்னேற்றுவதற்கும் அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தகையனவுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும் செய்வதற்கும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள் வங்கிக் கணக்குகளைத் தொடங்கவும், நடாத்தவும், முடிவுறுத்தவும் ; பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப் பொறுப்பின்றி பணங்களைக் கடனெடுக்கவும் அல்லது திரட்டவும்; முரீதீன்கள், முஹிப்பீன்கள், பின்பற்றுவோர், நலன் விரும்பிகள் போன்றவர்களிடமிருந்து மானியக்கொடைகளையும், நன்கொடைகளையும், கொடைகளையும் பெற்றுக் கொள்ளவும் சேகரிக்கவும் அதன் நிதிகளை முதலீடு செய்யவும் கூட்டுத்தாபனத்துக்கு உரித்தான அல்லது உரித்தாக்கப்பட்ட காணிகளில் கட்டிடங்களைக் கட்டவும் ; கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும் சேவை

யாளர்களையும் வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்துதல், வேலை நீக்கஞ் செய்தல் ஆகியவற்றுக்குமான தத்துவங்களும் அடங்கும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**5**. கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் ஆத்மீகத் தலைவர் அவர்களால் தமது சீவிய காலம் வரை இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கிணங்கவும் நிருவகிக்கப்படுதல் வேண்டும். இவர்களுக்குப் பின்னர், இவர்களின் வம்சா வழியில் கிலாபத்துப் பெற்று நியமிக்கப்பட்ட பின்வருவோருக்கு தலைவருக்குரிய எல்லாத் தத்துவங்களும் அதிகாரமும் இருத்தலும் வேண்டும்:

(அ) சங்கைக்குரிய அஸ்ஸெய்யித் ஹஸன் கோயாத் தங்கல் ;

(ஆ) சங்கைக்குரிய அஸ்ஸெய்யித் ஹுஸைன் கோயாத் தங்கல் ;

(இ) சட்டரீதியாக இவர்களின் வம்சாவழியில் கிலாபத் பெற்றவர்கள் ஆத்மீகத் தலைவர்.

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

**6**. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் கூட்டுத்தாபனத்தின் அப்போதைய வலுவிலுள்ள விதிகளுக்கிணங்க நியமிக்கப்பட்ட முகாமைச் சபையினால் நிர்வகிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் விதிகளை மாற்றவும் அதில் ஏதாவது ஒன்றைச் சேர்க்கவும் ஆத்மீகத் தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

(2) இக்கூட்டுத்தாபனம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகிக்கும் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவக் குழுவின உறுப்பினர்கள் முதலாவது முகாமைத்துவக் குழுவாக இருத்தல் வேண்டும்.

(3) காலத்திற்குக் காலம் இச்சட்டத்தினது அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாக விராத விதிகளை ஆயுட்கால ஆத்மீகத் தலைவர் அவர்களால், அவரின் முழுத் தற்றுணிபின் பேரில் விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(4) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்ட விதிகள் எதுவும் ஆம்மீகத் தலைவர் அவர்களாலேயே திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கு எதுவும் சேர்த்துக் கொள்ளப்படலாம் அல்லது நீக்கப்படலாம்.

(5) நிறுவனத்தின் எல்லாக் காணிகளும் கட்டிடங்களும் சங்கைக்குரிய அஸ்செய்யிது செய்கு கோயா தங்கல் அல் காதிரிய்யா வர் ரிபாஇய்யா அவர்களுக்கே உரித்தாவதுடன் நிறுவனத்தின் சகல நிர்வாகப் பொறுப்புகளும் அவரையே சாரும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**7.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், இறுதி விருப்பாவணக் கையளிப்பு, பொறுப்புகள், நன்கொடைகள், சேகரிப்பு நிதிகள், கட்டணங்கள் என்ற வகையாகக் கிடைக்கக்கூடிய எல்லாப் பணங்களும் முகாமைச் சபை தீர்மானிக்கும் ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் பெயரில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும் பணிகளையும் செயற்படுத்துவதிலும் நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்படும் எல்லாச் செலவினங்களையும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களை வைத்திருக்கலாம்.

**8.** கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, அளிப்பு, நன்கொடை இறுதிவிருப்பாவணக் கையளிப்பு அல்லது வேறேதேனும் வகையில் கிடைக்கக்கூடிய ஏதாவது அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தைப் பெறவும் வைத்திருக்கவும் சட்டப்படி இயலுமானதாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டுமென்பதுடன், சங்கைக்குரிய அஸ்செய்யிது செய்கு அல் காதிரிய்யா வர் ரிபாஇய்யா அவர்களின் தற்றுணிபின் பேரில் அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறு வகையில் கையாளவுமுள்ள முழுத் தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**9.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, சங்கைக்குரிய அஸ்செய்யிது செய்கு அல் காதிரிய்யா வர் ரிபாஇய்யா அவர்களின் முன்னிலையிலன்றி எந்தவொரு சாசனத்திலும் பொறிக்கப்படுதல் ஆகாது. அவர்கள் சமுகமாயிருந்தமைக்கு

அடையாளமாக அவர்களது பெயரை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டுமென்பதுடன் எவரேனும் ஆள் சாட்சிக்காரராகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

குடியரசினதும் ஏனை யோரினதும் உரிமைகளைப் பேணல்.

**10.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், இலங்கைக் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும், இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமை கோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களினதும் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ பாதித்தலோ ஆகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**11.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்